OS No.54 /2015
Dated : 10-2-2023

Time: 12.10 pm to 12.23 pm

P.W. - 2 சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் சார்பாக குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

**4)** தாவா சொத்தில் 4 வீடுகள் மற்றும் ஒரு கூரை வீடு , கால்நடை பட்டி உள்ளது என்றால் சரிதான். மேற்படி மெத்தை வீட்டிற்கு மேற்கே உள்ள கூரை வீட்டில் வாதி பிரதிவாதியும் ஒரே வீட்டில் வசித்து வருகிறார். அதற்கு மூன்று கதவுகள் இருக்கிறது என்றால் சரிதான். தனபாக்கியம் இறந்து 6 வருடங்கள் கழித்து அவருடைய கணவர் துரைசாமி இறந்தார். துரைசாமியும் பிரதிவாதிகளும் ஒரே மெத்தை வீட்டில் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். அதில் கோவிந்தனும் இருந்தார். நான் தவறாக சொல்கிறேன் என்றும் கோவிந்தன் 40 வருடங்களுக்கு முன்பே திருமணம் செய்து தனியாக வசித்து வருகிறார் என்றால் அது தவறு.

5) இறந்து போன துரைசாமி பெயரிலும் அவரது மனைவி தனபாக்கியம் பெயரிலும் சொத்துக்கள் , பட்டா, வருவாய் ஆவணங்கள் உள்ளன என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. துரைசாமிக்கும், தனபாக்கியத்துக்கும் குழந்தைகள் இருந்தார்களா என்று எனக்கு தெரியாது.துரைசாமிக்கும், தனபாக்கியத்துக்கும் பிரதிவாதிகள் தான் பராமரித்து செய்து வந்தார்கள் என்றால் , வாதியும்தான் செய்தார். நான் தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.மேற்படி அவரவர்கள் நிலத்தை அவரவர்கள் ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள் என சாட்சி தாமாக கூறுகிறார். வாதிக்கும் 1 ம் பிரதிவாதிக்கும் அவரது தாத்தா முத்துசாமியின் சொத்தை தனித்தனியாக ஓட்டி வருகிறார்கள் என்றால் சரிதான். துரைசாமி மற்றும் தனபாக்கியத்திற்கு பாத்தியப்பட்டசொத்தையும், பிரதிவாதிகள் தான் அவர்களுடைய சொத்துடன் சேர்த்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வாதியும் சேர்ந்து தான் அனுபவித்து வருகிறார்.

6) மேற்படி சொத்துக்கள் குறித்து பிரச்சனை இருப்பது இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு 12 வருடங்களுக்கு முன்பே தெரியும். துரைசாமியும் தனபாக்கியமும் 2 வது பிரதிவாதிக்கு உயில் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியும் என்றால்

இல்லை. மேற்படி உயில் சொத்துக்களில் வாதி பாகம் கோர எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை..இல்லை.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/- Ananthan**
**Subordinate Judge,**
**Attur.**